மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கப்பலோட்டிய தமிழனுக்கு சிலை வைக்காமல் இருந்தது அந்தக் காலம், சிலை வைத்துப் பாராட்டுவது இந்தக் காலம். ஆகவே கப்பலோட்டிய தமிழனின் பெயரில் துறைமுகம் ஏற்பட வேண்டுமென்பதற்கு இந்த அரசு எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்துக்கொள்ளும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சிலை வைப்பதிலே எங்களுக்கு அவ்வளவு நம்பிக்கையில்லை. துறைமுகம் வைப்பதில் தான் அதிக நம்பிக்கை உண்டு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்த நம்பிக்கையை நேரு வந்து இங்கு சிலை திறந்தபொழுது தெரிவித்திருக்கவேண்டும்.

திரு. வி. கே. இராஜாப் பிள்ளை : தலைவரவர்களே, இந்திய சுதந்திரப் போராட்டத்தின்பொழுது ஜெர்மனியில் ராஷ்பிஹாரி கோஷ் அரசாங்கத்தில் அமைச்சராக இருந்தாலும் உலகப் பெரும் போரில் எம்டன் என்ற நீர் மூழ்கிக் கப்பல் நமது துறைமுகத்திற்கு வந்தபொழுது உயர்நீதி மன்றத்திலிருந்து குண்டு வீசியவரும் மாவீரருமான சண்பகராமன் பிள்ளையின் பெயரை சென்னை துறைமுகத்திற்கு வைக்க மத்திய அரசுக்கு மாநில அரசு சிபார்சு செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவுமில்லை.

டிராக்டர் தொழிற்சாலை.

*** 713 வினா.—திரு. மா. பா. சாரதி :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தமிழ்நாட்டில் ஹங்கேரி நாட்டு உதவியுடன் டிராக்டர் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஹங்கேரி நாட்டு உதவியுடன் டிராக்டர் தொழிற்சாலை ஒன்றை தமிழ்நாட்டில் அமைப்பதுபற்றி 1969-ம் ஆண்டு நவம்பர் திங்களில் அந்நாட்டுத் தொழில் அதிகாரிகளுடன் பேச்சு நடந்தது. ஆனால் இதற்கான மத்திய அரசு அனுமதி ராஜஸ்தான் மாநிலத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. ந. வீராசாமி : ஹங்கேரி நாட்டுடன் பேச்சு வார்த்தை நடத்தி டிராக்டர் தொழிற்சாலையை உருவாக்கும் செயற்குறிப்பின்படி எந்த இடத்தில் அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்க இருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, இதற்கான பேச்சு வார்த்தை ஹங்கேரி நாட்டு அதிகாரிகளுடன் நடைபெற்று தமிழ்நாட்டில் அதை நிறுவுவது பற்றி நல்ல கருத்தைத் தெரிவித்தார்கள். ஆனால் இதற்கான மத்திய அரசின் அனுமதி ராஜஸ்தான் மாநிலத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது.

1972 மார்ச் 25]

திருமதி ஜோதி வெங்கடாசலம் : சார், ஹங்கேரி நாட்டுடன் பேச்சு வார்த்தை நடத்தியது தமிழ்நாட்டில். அதற்கான மத்திய அரசின் அனுமதி ராஜஸ்தான் மாநிலத்திற்குப் போயிருக்கிறது என்றால் அதற்கு மத்திய அரசிடம் மாநில அரசு காரணம் கேட்டிருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : காரணம் என்ன என்று கேட்கவில்லை. தமிழ்நாட்டில் அப்படிப்பட்ட டிராக்டர் தொழிற்சாலை அமைக்கத் தகுந்த வசதிகள் இருக்கின்றன என்பதையெல்லாம் சுட்டிக் காட்டி இன்னும் பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டு தான் இருக்கிறோம்.

திரு. எம். முத்தையா : ஹங்கேரி நாட்டுடன் பேச்சு வார்த்தை நடத்தியது எந்த ஆண்டில் ? எந்த இடத்தில் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஹங்கேரி நாட்டு அதிபர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தியது சென்னையில் 1969-ம் ஆண்டு நவம்பர் திங்கள். அந்தத் தொழிற்சாலையினை ராஜஸ்தான் மாநிலத்தில் அமைப்பதற்கு மத்திய அரசு அனுமதி வழங்கி இருக்கும் காரணத்தால் இனிமேல் செய்ய வேண்டியது எல்லாம் அதை அங்கிருந்து இங்கு மாற்றுவதற்கான முயற்சி தான்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அந்த டிராக்டர் தொழிற்சாலையைத் தமிழ்நாட்டில் அமைக்க மத்திய அரசாங்கம் ஏதாவது நிபந்தனை வைத்ததா ? அந்த நிபந்தனையை மாநில அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்று பொதுவாகச் சொல்லப்படுவது உண்மையா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : எந்த நிபந்தனையும் சொல்லவில்லை. தமிழ்நாட்டில் ஏற்கெனவே ஒரு தொழிற்சாலை இருக்கிறது என்பதை மத்திய அரசு சுட்டிக் காட்டியிருக்கிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, ஒரு டிராக்டர் தொழிற்சாலை ஏற்கெனவே தமிழ்நாட்டில் இருக்கின்ற காரணத்தால் மற்றொன்றைக் கொடுக்கக்கூடாது என்று கிடையாது. தமிழ்நாடு அரசு ஹங்கேரியோடு கொலாபரேஷன் செய்வதற்கு எல்லாவித பேச்சு வார்த்தையும் நடத்தி முடிவு கண்ட பிறகு அது ராஜஸ்தானுக்குப் போயிருப்பது சரியல்ல. அதைக் கனம் அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டி தமிழ்நாட்டில் அமைக்கப்படுவதற்கு ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : முடிவு கட்டுவது நாமல்ல. ஹங்கேரி நாட்டுத் தொழில் அதிபர்கள் தமிழ்நாட்டில் நடத்துவதில் சில அனுகூலங்கள் இருக்கின்றன என்று கருதி இதற்கு முன் வந்தார்கள். இருந்தாலும் இறுதியில் எல்லாவற்றையும் மத்திய அரசு முன்னால் வைத்து அந்த அனுமதி ராஜஸ்தான் மாநிலத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : நம் நாட்டிலே நல்ல டிராக்டர்கள் தயாரிக்கும் திறமை இருக்கும்போது ஹங்கேரி நாட்டு கொலாபரேஷன் தேவை தானா ? முழுதும் இங்கேயே உற்பத்தி செய்யக்கூடிய நிலையில் தொழிலை ஊக்குவிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : டிராக்டர்கள் இப்போது கூட இங்கு நூற்றுக்கு நூறு உற்பத்தி செய்யப்படவில்லை. முதலில் வெளிநாட்டுப் பகுதியாக நூற்றுக்கு நூறு என்று ஆரம்பித்து பிறகு 90, 80 என்று படிப்படியாகக் குறைந்து, பிறகு நூற்றுக்கு நூறு இந்தியா அல்லது தமிழ்நாடு என்ற முறையில் உற்பத்தி செய்கிறோம். அந்த முறையில் தான், இதிலே கூட, 49 பகுதி தமிழ்நாடு 51 பகுதி ஹங்கேரி என்று ஆரம்பித்து பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அவர்களுடைய பகுதியைக் குறைக்கலாம், என்று திட்டமிடப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண் 714 மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகிறது.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக் குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

(2) அறிக்கை அளித்தல்.

மீனளத்துறை பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைப் பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை.

THIRU K. VEZHAVENDAN : Sir, I rise to present the report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Fisheries Department.

(3) 1972–73-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

(அ) நிதிக் கோரிக்கை எண் 16—வேளாண்மை.

(ஆ) நிதிக் கோரிக்கை எண் 39—வேளாண்மை மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. மன்னை நாராயணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 16—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ரூ. 21,03,85,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRUMATHI T. N. ANANTHANAYAKI : Sir, to discuss about the introduction of Crop Insurance Scheme in Tamil Nadu, I move the following cut motion :—

"That the allotment of Rs. 21,03,85,400 under Demand No. 16, Agriculture, be reduced by Rs. 100."

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய விளைபொருள்களுக்கு உற்பத்திச் செலவை அனுசரித்து நியாய விலை கிடைக்க ஏற்பாடு செய்வதில் அவசியம் பற்றி விவாதிக்க—